# கிறித்தவ கீர்த்தனைகளில் மேம்பாட்டுச் சிந்தனைகள்

*முனைவர் ஜா. ஜூலியட் ஹில்டா*
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
நாசரேத் மார்காரிஸ் கல்லூரி பிள்ளையன்மனை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6483

### முன்னுரை

பொதுவாக இலக்கியங்கள் மனித வாழ்வை மேம்படுத்துவனவாக உள்ளன. அந்த இலக்கிய வரிசையில் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான கீர்த்தனைகளும் ஒன்று குறிப்பாக கிறித்தவப்புலவர்கள் மனித சமுதாயத்தை மேம்படுத்தும் நோக்குடன் பல இலக்கிய வகைகளைக் கையாண்டனர். அவற்றில் கீர்த்தனை சிறந்த வகையாக அமைந்துள்ளது.

### கீர்த்தனை விளக்கம்

கீர்த்தனை என்ற சொல்லுக்கு "புகழ்பாடுதல்" என்று பொருள். சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று கீர்த்தனை. பெருமைபாடுதல் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் உள்ளது. "வருவிசைப் புனலைக் கற்சிறை போல்

**ஒருவன் தாங்கிய பெருமையும் (தொல் பொருள் 63)**

கி.பி ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் "கீதம்" என்ற சொல் வருகிறது.

"கீதம் பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே"

"கீதம்" என்ற சொல் இசைப்பாடலைக் குறிக்கும். கீர்த்தனை இராக தாளத்துடன் பாடுவது ஆகும். கி.பி. 18ல் தமிழில் சிறந்த கீர்த்தனை நாடகங்கள் தோன்றின. கிறித்தவப் புலவர்களில் மாயுரம் வேதநாயகம் பிள்ளை (1826- 1889) இந்நூற்றாண்டில் குறிப்பிடத்தக்கவர்.

### கிறித்தவக் கீர்த்தனைகள்

கி.பி. 1612 - ல் பெர்னாண்டசு ஒரு தமிழ்ப்புலவரைக் கொண்டு மதுரையில் கிறித்தவத் தமிழ் இசைப்பாக்களை எழுதச் செய்தார். ஆனால் அது கீர்த்தனை அன்று. கிறித்தவக் கீர்த்தனையை முதன் முதல் தமிழில் தந்தவர் வீரமாமுனிவர். இவர் 1726- ல் கித்தேரி அம்மாள் அம்மானை வடிவில் ஒரு கீர்த்தனை இயற்றினார். டி.பிரான்சிஸ் எச்.பி.ராஜ்குமார் இயற்றிய கிறித்தவர் கீர்த்தணைகள் 1853 ல் முதல் பதிப்பாக வந்தது. செஞ்சிதாமஸ் யாழ்ப்பாணத்தில் பி. சுப. வாக்கியம் பிள்ளை, பத்தாம்பத்திநாதர், சந்தியாகு அடிகள், ஜே.எஸ். சாண்ட்லர், ஏ. பெரியநாயகம் போன்ற புலவர்கள் கீர்த்தனை பாடல்களை இயற்றியுள்ளனர்.

குறிப்பாக இக்கட்டுக்கரையில் வீரமாமுனிவர், தஞ்சை வேதநாயகசாத்திரி, மாயுரம் ச.வேதநாயகம் பிள்ளை கீர்த்தனைகள், ஆகிய கீர்த்தனைகள் மட்டும் இடம் பெறுகின்றன. இவர்களின் கீர்த்தனை பாடல்களின் தலைப்புகளிலேயே மானுட மேம்பாட்டு கருத்துகள் இடம் பெறுகின்றன.

**வீரமாமுனிவர் கீர்த்தனை**

வீரமாமுனிவர் 08.11.1680 - ல் இத்தாலியில் பிறந்தவர். இவரின் சிறந்த இலக்கண, இலக்கிய நூலைப் பலர் ஆய்வுசெய்தனர். ஆனால் இவர் தனக்கிருந்த இசையறிவால் தனது இலக்கண நூலில் தாளங்கள், இராகங்கள் பற்றி பேசுகிறார். "சிந்து" என்ற தலைப்பில் கீர்த்தனை இயற்றினார். இச்சிந்துப்பாடல் கீர்த்தனை ஆகும். இவருடைய ஆபத்துப்பத்து, ஆசைப்பத்து, கீர்த்தனைகள் மூன்றையும் 1975-ல் எஸ்.மிக்கேல் பாதிரியார் சென்னையில் வெளியிட்டார். இப்பதிப்பில் கிறிஸ்துவின் பிறப்பு, பாவத்தின் பயங்கரம், ஆண்டவரின் தயவை வேண்டல், தேவ அன்னையிடம் திருமைந்தனைத் தரக் கேட்டல், நல்ல மரணத்திற்காக ஆண்டவனை மன்றாடல், திருக்குடும்பத்தை நோக்கி மரணத்திற்குத் தயார் செய்தல், நம்பிக்கை ஆகியன அவ்வேழு கீர்த்தனைகளின் தலைப்புகள் ஆகும். வீரமாமுனிவரின் கீர்த்தனை தலைப்புகளும் மனிதன் உயர் நிலையை அடைவதற்குரிய வழிகளை வகுத்துக் கூறுவதாக அமைகிறது.

**தஞ்சை வேதநாயக சாத்திரி கீர்த்தனைகள்**

திருநெல்வேலியில் வாழ்ந்த (1735-1799) அருணாச்சலம் பிள்ளை என்பவரின் மகனே வேதநாயக சாத்திரி ஆவார். இவர் 1774-ல் பிறந்தவர். "வார்ட்ட" பாதிரியாரின் வாழ்வும் வேதநாயர் வாழ்வும் பின்னிப் பிணைந்தது. சாத்திரியாரின் பெத்லகேம் குறவஞ்சி, ஞானத் தச்ச நாடகம், ஆராணாதிந்தம் ஆகியவற்றில் கீர்த்தனைகள் உள்ளன.

**பெத்லேகம் குறவஞ்சி**

1800ல் இயற்றிய பெத்லேகம் குறவஞ்சியை 1820-ல் சிலதிருத்தங்கள் செய்தார். விவிலியக் கருத்துகளைத் தனது கீர்த்தனைகளில் மிக இயல்பாகச் சேர்ந்து இசைபாடியுள்ளது, இவரது கீர்த்தனைகளின் தனிச் சிறப்பாகும். மதக் கருத்துக்களை மதநிகழ்ச்சிகளைக் கற்பனை வளத்துடன் கீர்த்தனைகளில் புனைந்துள்ளார்.

"பறவைகள் வரும் சிந்து" என்ற பகுதி மேலே கூறிய கருத்தை வலியுறுத்துகிறது.

**பல்லவி**

கூடி வருகுவதையே,
**பறவைகள் கூடி வருகுவதையே**

**அனுபல்லவி**

**கூடி வருகுவதையே பெத்தலே மென்ற**
**கோட்டைக் கரசனி னாட்டுப் புறமெல்லா**
**மாடப் புறாவான ஞானிகளும் அன்ன**
**மானசீ யோன்சபை மேவு மயில்களும்**

என்ற வரிகளில் விவிலியத்தில் இடம்பெறும் சீயோன் சபை பற்றி கூறுகிறது.

**ஞானத் தச்சநாடகம்**

ஞானத் தச்சநாடகம் பாத்திரங்கள் வரும் வழக்கமான நாடகமென்று.

உலகு படைத்த ஆதிபிதாவே, ஞானத்தச்சன் அவனில் பல்வேறு கூறுகளை விளக்குவதே நாடகம் எனும் இந்நூல். இந்நாடகத்தில் சிருஷ்டிப்பு, நோவாவின் பேழை, உடன்படிக்கைப் பெட்டி, ஒரே சாதி, உலகத்தச்சன் கிரித்தியம், ஆனந்தக் களிப்பு, வெண்கலச் சற்பம் என்ற பகுதிகள் உள்ளன. இதனை 1830 - ல் இயற்றினார்.

**பல்லவி**

**தச்சன் படைத்த தல்லவோ உலகமெல்லாந்**
**தச்சன் படைத்த தல்லவோ**

**அனுபல்லவி**

**உச்சித மதானவான**
**அச்சயனெனு மெஞ்ஞான (தச்)**

**சரணம்**

**ஆண்பெண் ணிரண்டு சாதி**
**யுல்லா திலையென் றெண்ணிக்**
**காண்ப தனைத்து மாளக்**
**கற்பனை யெல்லாங் கொடுத்து.**

கடைசி இரண்டடிகள் கவிச்சுவை உடையன.

“நோவாவின் பேழைசுசு என்ற பகுதி ஆய்வுக்குரியது. ஆண், பெண், என்ற வேற்றுமை அகற்றி மனிதன் வாழ வேண்டும். என்ற கருத்து விவிலியத்தை அடி யொற்றியது.

**ஆரணாதிந்தம்**

ஆராணாதிந்தம் என்பது வேதத்தின் அடக்கம் அல்லது ஆதி தொடுத்து அந்த மட்டும் என்பது பொருள். 1821-ல் இயற்றப் பட்டது. புதுமைக் கருத்தை கீர்த்தனையில் தருகிறார். கீர்த்தனையில் இருவர் உரையாடும் புதுமையை செய்கிறார்.

சீயோன் என்பாளுக்கும் மனுவேல் தம்பிரானுக்கும் நடக்கும் சுவையான உரையாடலை தருகிறார்.

**பல்லவி**

**மனமயங்காதே என்மானே**
**நான் வான்போய் வருவேன் றியங்காதே**

**அனுபல்லவி**

**கனமே பெருசலையில் வாழனமே**
**கண்ணே கலங்காதே என்மானே (மன)**
**மனுவேல் தம்பிரானே என் பிரானே**
**வானா சனத்தி லிருப்போனே**
**அனியாய பாழுலகிற் கொடிதாம்**
**அவதி யுத்தரிப்பேனோ என் சுவாமி? (மன)**

சீயோன் எனும் மணவாட்டிக்கும், மனுவேலாகிய மணவாளனுக்கும் நடக்கும் உரையாடல் இது மனிதன் பரிசுத்தமாக வாழும்போது இறைவனோடு உரையாடலாம் எனும் கருத்து வெளிப்படுகிறது.

**தேம்பாவணிக் கீர்த்தனை நாடகம்**

தேம்பாவணிக் கீர்த்தனை நாடகம் வீரமா முனிவரின் தேம்பாவணிக் கதையைக் கருவாகக் கொண்டது. ஏசுபிரானின் தந்தை சூசையப்பரின் வரலாற்றை விளக்குவது. இக்கீர்த்தனை நாடகத்தை ஆரோக்கிய நாயகர் 1857-ல் புதுப்பேட்டை அந்தோணியார் ஆலயத்தில் அரங்கேற்றினார். அப்போது பல பரிசுகளை வழங்கினார்கள். இதில் 283 கீர்த்தனைகள் உள்ளன. படித்தற்குரியது, நடித்தற்குறிய தன்று. கிறித்தவ மறைக்கருத்துக்கள்

**பொதிந்த நாடகம்**

நீதி கூறுவதில் தலைசிறந்த கீர்த்தனை நூல் இது. நேராகவும் உவமை வழியாகவும் சில நுணுக்கமான நீதிகளைத் தருகிறார் ஆசிரியர், ஆதிதாளத்தில், ஆனந்தபைரவி இராகத்தில் வரும் ஒரு கீர்த்தனையில், சரணத்தில், கீழ்வருமாறு நீதிகளை இன்பந்தரும் உவமையுடன் தருகிறார்.

**“போர்க்கஞ்சும்பேடிபோல நடக்கப்பின் வாங்காதே**
**பொருளில்லாதவர்போல குறட்டை விட்டுத் தூங்காதே**
**ஏர்க்கஞ்சுங்குண்டைபோலே யெடு க்காச்சுமை தாங்காதே”**

மனிதன் வாழவேண்டிய நீதிக்கருத தை எடுத்துக் கூறுகின்றது.

**மாயுரம் ச.வேதநாயகம்பிள்ளை கீர்த்தனைகள்**

சர்வ சமய சமரசக் கீர்த்தனையை 1878-ல் எழுதினார். சத்தியவேதக் கீர்த்தனை எனும் பெயரில் ஒரு நூலை 1889-ல் வெளியிட்டார். கடவுளைப் பாடும் கீர்த்தனைகளே மிகுதி என்னும் நிலையில், கீர்த்தனையில் மாற்றத்தைக் கையாண்டவர். காலத்தின் மீதும் பாடிக் காட்டியவர். அலுவலர்களின் நிலையையும், வழக்கறிஞர்களின் பொய்மையையும் எடுத்து

விளங்குவதன் மூலம் கீர்த்தனை ஒரு பயனுள்ள இலக்கியவகை என்பது இவரது படைப்பில் விளங்கும். நூலின் பெயருக்கேற்ப அனைத்து மதத்தினரும் படித்து இன்புறும் அளவில் உள்ளன.

ஆதிமூலன், ஐயன், வேதநாயகன், ஆதி அந்தமிலான் போன்ற சொற்களால் எம்மதத்தினருக்கும் பொதுவான கீர்த்தனை எனலாம்.

**“ஐயனே உன் அழகைக் காண**
**ஆசை நான் கொண்டேன”**
**“வேதநா யகன்செய் பெண்மதி மாலையே”**

குடும்பவிளக்கில் பெண்ணியல்பை கூறுகிறார். “தகப்பன் மகளுக்குப் புத்தி கூறல்” என்ற தலைப்பில் உள்ளது.

**“கெண்டைச் சேலைக்காரி தான்கிழவி யாகாளோ?**
**-------------------------------------**
**--------------------------------------------------**

எனும் வரிகளில் வீண் ஒப்பனை பெண் உயர்வு அன்று. பின் தூங்கி, முன் எழும் பத்தினியை விரும்பிப் பாடுகிறார்.

## முடிவுரை

கிறித்தவ கீர்த்தனை பாடிய புலவர்களின் பாடல்கள் விவிலியக் கருத்தை அடியொற்றியே அமைந்துள்ளன. அத்தனை கீர்த்தனை பாடல்களும் மனிதன் தான் இருக்கும் நிலையிலிருந்து உயர்ந்த நிலையை அடைவதற்கான நெறி முறையைக் கூறுகின்றனர். வேதம் கூறும் நெறி முறைப்படியே அறிவுரைகளாக அமைந்துள்ளன. சமய வேறுபாடற்ற நிலையில் பொதுவான செய்திகளாக அமைந்துள்ளன.